# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No. 114/2018 தேதி-29.07.2025

(DW.1) - ரவி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் 2 ஆம் பிரதிவாதியும் அரசியல் அமைப்பை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. அரசியல் அமைப்பு அல்ல அது மதம் சார்ந்த அமைப்பு. என்மீதும் 1 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் மீது பல குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் போராட்ட ரீதியான வழக்குகள் உண்டு. வழக்கின் வாதியை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 2 மாதத்திற்கு முன்பு கடைசியாக பார்த்தேன். நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை. வாதி உடம்பு சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கிறார் என்றால் எனக்கு அது தெரியாது. வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி எல்லை நிர்ணயம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

வாதிக்கு வா.சா.ஆ. 2 ஆவணப்படி வழக்கு பட்டிகை சொத்து உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தை பார்த்துள்ளேன் அது திருவட்டார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ. 2 ஆவணத்தை லெட்சுமி நாராயண சர்மா என்பவர் வாதியின் பெயரில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையத்தின் பிறகு வாதியின் பெயரில் பட்டா, நிலவரி, வீட்டுவரி, மின் இணைப்பு ரசீது ஆகியவை உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 103 மற்றும் 45 சென்ட் ஆகும்.

வழக்கு பட்டிகை சொத்தைப்பொறுத்து எனக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ உரிமை கிடையாது என்றால் சரியல்ல. உரிமை இருக்கிறது. எனக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ உரிமை இருப்பதை காண்பிப்பதற்காக கிரைய ஆவணமோ பட்டாவோ நிலவரி ரசீதோ மற்றும் வருவாய் துறை ஆவணங்களோ தாக்கல் செய்ய முடியுமா என்றால் எங்கள் பெயரில் ஆவணம் இருக்கிறது தற்போது தாக்கல் செய்ய முடியவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

வினில்குமார் என்பவர் 18.06.2018 அன்று திருவட்டார் சார்பதிவாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் இருப்பது வினில்

குமாரின் கையொப்பம் என்றால் சரிதான். (**என்னிடம் காண்பிக்கப்பட்ட மேற்கூறிய ஆவணம் வா.சா.ஆ- 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) தேறகவேலி மடம் முன்சர்வே எண் 109, 5 ஏக்கர் 31 சென்ட் சம்பந்தமாக எந்த ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என்று மனு கொடுத்துள்ளார். மேற்படி 5 ஏக்கர் 31 சென்ட் பல நபர்கள் பெயரில் உள்ளது என்றால் அது போலியாக ஆவணம் தயாரிக்கப்பட்டு பல நபர்கள் பெயரில் உள்ளது. மற்ற நபர்கள் பெயரிலும் பட்டா மற்றும் நில வரி ரசீது உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

மேற்படி 5 ஏக்கர் 31 சென்ட் கோவிலுக்கு உரிமைப்பட்டது என நான் கூறியிருப்பது அதற்கான ஆவணம் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வா.சா.ஆ- 9 மேற்படி 5 ஏக்கர் 31 சென்ட் சொத்தை கிரையம் செய்யக்கூடாது என்று மாவட்ட பதிவாளர் அவர்களும் திருவட்டார் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து தடை சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் அந்த தடை உத்தரவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தடை உத்தரவை மீறி திருவட்டார் சார்பதிவாளர் அலுவலகத்தில் வாதி பெயரில் வா.சா.ஆ. 2 ஆவணத்தை பதிவுசெய்யப்பட்டது.

2 ஆம் பிரதிவாதி மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஒரு ரிட் மனு எண் 20323 /2018 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். **என்னிடம் காண்பிக்கப்பட்ட ரிட் அப்பிளிகேசன் வா.சா.ஆ- 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ரிட்மனு தலைமை செயலாளர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட கண்காணிப்பாளர், தாசில்தார் மற்றும் தேறேக வேலி மடம் நிர்வாகிகளுக்கு ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ரிட் மனு பழைய சர்வே எண் 109 ல் 5 ஏக்கர் 31 சென்ட் சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ரத்து செய்யகோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

இந்த வழக்கின் வாதி மேற்படி ரிட் மனுவில் 6 ஆம் எதிர்மனுதாரராக கட்சி சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி ரிட் மனு பொதுநல வழக்கு அல்ல தனிப்பட்ட விரோதத்தினால் தாக்கல் செய்யப்பட்டது என்று உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். ரிட் உத்தரவிற்கு எதிராக 2 ஆம் பிரதிவாதி மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ரிட் உத்தரவில் 5 ஏக்கர் 31 சென்ட் யார்யாருக்கு உரிமைப்பட்டது என்று கண்டறியப்படவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கிற்கு முன்புதான் மேற்படி ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ரிட் உத்தரவில் தேறேக வேலி மடத்தின் நிர்வாகிதான் தாக்கல் செய்யவேண்டும் மனுதார் /2 ஆம் பிரதிவாதி தன்னிச்சையாக தாக்கல் செய்ய முடியாது என உத்தரவில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரிட்மனுவில் கூறப்பட்டுள்ள பரிகாரத்தைப்போலவே இந்த வழக்கின் பரிகாரமும் கேட்கப்பட்டுள்ளது ரிட்மனுவானது கண்டங்களை சேதப்படுத்தக்கூடாது என போடப்பட்ட மனு. இந்த வழக்கை வாதிகள் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பதாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கோவில் சார்ந்த சொத்துக்களை தேவசம் சொத்துக்கள் என்றும் வழக்கு சொத்துக்கள் டிரஸ்ட் சொத்துக்கள் என்றால் சரிதான். டிரஸ்ட் சொத்துக்கள் மற்றும் தேவஸ்த்த சொத்துக்களை தவிர மற்ற பொதுமக்கள் சொத்துக்கள் பிரம்மசம் சொத்து என்று அழைக்கப்படும் என்றால் பிரம்மசம் என்பது மலையாள வார்த்தை பிரம்மசம் என்பது பொது மக்களின் சொத்தை கட்டுப்படுத்தாது. பொதுமக்கள் உபயோகிக்கும் சொத்தை என்ன என்று அழைப்பார்கள் என்றால் பட்டா என்று அழைப்பார்கள். பிரம்மசம் என்பது டிரஸ்டை உருவாக்கி அந்த சொத்தை கட்டுப்படுத்த உபயோகிக்கும் பெயர்தான் பிரம்மசம். மேற்படி நான் கூறியிருப்பதை என்னால் நிரூபிக்க முடியும். பிரம்மசம் சொத்து என்ன என்றால் பிராமணர்களின் சொத்து என்றால் சரியல்ல.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாயர்களின் வீடை தரவாடு எனவும், பிராமணர்கள் வீடை மடம் என்றும் அழைப்பார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் கிரையம் கொடுப்பவரின் விலாசம் மடம் என்று குறிப்பிடுவது கோவில் சொத்துக்களை பராமரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட் அந்த டிரஸ்டின் உறுப்பினர்கள்தான் வா.சா.ஆ 1ஐ ஏற்படுத்தியவர்கள். அந்த டிரஸ்ட் பதிவு செய்யப்பட்டதா என்றால் 1000 வருடங்களுக்கு முன்னால் உள்ளது. பதிவு செய்யப்பட்ட டிரஸ்ட் ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும்.